(ஆழ்வார்களின் காலம்பற்றி)

இச்சுவடியில் முகப்பிலேயே 'ஆசிரியர் முன்னுரை' என்ற மகுடத்தின் கீழ்—"இந்நூலில், உபதேசரத்தினமாலையில் மணவாளமாமுனிகளால் அறுதியிட்டபடி ஆழ்வார்கள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளனர். *பொய்கையார் பூதத்தார் பேயார் புகழ்மழிசை.........நற்கலியன் ஈதிவர்தோற்றத் தடைவாமிங்கு" என்றெழுதிவிட்டு. அடுத்தபக்கத்தில்—"கி. பி, 7ஆம் நூற்றுண்டிலிருந்து ஒன்பதாம் நூற்றுண்டுமுடிய உள்ள இடைக்காலத்தில் ஆழ்வார்கள் வாழ்ந்தார்கள் எனக்கொள்வது உசிதமாகும்" என்று தலைநிறையப் பாகையணிந்த இந்த ஜட்ஜ் தீர்ப்புக் கூறுகின்றுர். சுவடியின் முடிவில் "ஆழ்வார்களின் காலம்" என்று இரண்டு பக்கமிட்டு, டாக்டர். இராசமாணிக்கனுர், சாமிசிதம்பரனுர், பூர்ணலிங்கம் பிள்ளை, கலைக்களஞ்சியம், மு. இராகவய்யங்கார் ஆகிய இவ்வைவர் கருத்தைக் குறிப்பிட்டுள்ளார். *மாறன் பணித்த தமிழ்மறைக்கு ஆறங்கங்கூற

அவதரித்த திருமங்கையாழ்வாருடைய அவதாரம் முடிவுபெற்று ஒரு நூருண்டு முடிந்தபின்னர் நம்மாழ்வார் திருவவதரித்ததாகக் காட்டுகிருர். *மாறன் பணித்த தமிழ்மறைக்கு* என்ற உபதேசரத்தினமாலைப் பாசுரத்தையும் கையாளுகிருரந்தோ! இராசமாணிக்கனுர் முதலாக மு. ராகவையங்கார் முடிவாகவுள்ள நூதன ஆராய்ச்சியாளர்களின் காலநிலைக் கட்டுரைகளெல்லாம் நம்மால் அப்போதைக்கப்போது நீறுநீருகிப் பாறுபாருக்கப்பட்டொழிந்தன வென்பதை கூபகூர்மம் அறியாவிடினும் உலகமுழுதுமுணரும். நமது அந்த மறுப்பு நூல்களில் ஒன்றுகூட மறையவில்லை. உலகமெங்கும் பரந்து விளங்கிக்கொண்டிருக்கின்றன நிகழும் 1976 ஆண்டிலேயே மார்ச்சுமாதத்தில் வெளியிட்ட பங்குனி விசாக மலரில் [ஸ்ரீ ராமாநுஜன் 333ல்] சுருக்கமாக வெளியிட்டிருப்பதை முன்னம் இங்கு எடுத்துக்காட்டுகிறேன்.

அடியேனுடைய எண்பத்தைந்து பிராயப் பூர்த்தியின் நினைவுமலரான எண்பத்தைந்து வார்த்தாமாலையிலிருந்து

ஆழ்வார்களின் கால ஆராய்ச்சி செய்கிற நவீனர்கள் கண்மூடிகளாய் மனம்போனபடியும் கைபோனபடியும் எழுதியுள்ளார்கள். "உழைக்கன்றே போல நோக்கமுடையவர் வலையுள்பட்டு* என்று திருமாலையில் தொண்டரடிப் பொடியாழ்வாரும்; *துவரித்த உடையவர்க்கும் தூய்மையில்லாச் சமணர்க்கும்* என்று பெரியதிருமொழியில் (5-6-8) திருமங்கையாழ்வாரும் கூறியிருக்கையாலே, உடையவர் என்று வழங்கப்படுகிற ஸ்ரீராமாநுஜருக்குப் பிறகே அவ்வாழ்வார்களிருவரும் அவதரித்தார்களென்பது கல்வெட்டு'' என்பது அவர்களது மருள் மொழிகளிலொன்று. பெரிய திருமொழியில் திருக்கடன்மல்லைப்பதிகத்தில் (2—6—9) *இணங்கு திருச்சக்கரத்தெம்பெருமானுர்க்கிடம்* என்றதில் (எம்பெருமானுர்க்கு) என்பதற்கு எம்பெருமானுக்கு என்றே பொருள். ஆர்விகுதி உயர்வு குறிப்பதாம். ஸம்பிரதாயத்தில் ஸ்ரீராமாநுஜர்க்கு எம்பெருமானுரென்று திருநாமம் ப்ரஸித்தமாகையாலே, நவீன ஆராய்ச்சிக்காரர்களிலொருவர் இது ஸ்ரீராமாநுஜரையே குறிப்பதாகக் கொண்டு,இப்பாசுரத்தை யெடுத்துக்காட்டி''இதனுல் திருமங்கையாழ்வார் ஸ்ரீராமாநுஜர்க்கும் பிற்பட்டவரென்பது கல்வெட்டு'' என்றெழுதியுள்ளார். மிக மெச்சத்தக்க மேதை. ஸ்ரீகுலசேகராழ்வாரருளிச் செய்த பெருமாள் திருமொழியில் (2-2) *ஆடிப்பாடி யரங்கவோவென்றழைக்கும் தொண்டரடிப் பொடியாட நாம்பெறில்*என்றுள்ள பாசுரத்தை யெடுத்துக்காட்டி 'இத்தால் தொண்டரடிப்பொடியாழ்வார் குலசேகராழ்வார்க்கு முற்பட்டவரென்பது ஐயமின்றி அறியலாகிறது'' என்று ஒரு மஹாமேதாவி எழுதியுள்ளார். இதனோடு கூடவே யெழுதுகிருரவர்-'இப்பாசுரத்தில் தொண்டரடிப் பொடியென்பதற்குத் தொண்டர்களின் பாததூளியென்று பொருளானுலும் தொண்டரடிப்பொடியாழ்வாரை நினைப்பதும் நினைப்பூட்டுவதும் குலசேகராழ்வரர் கருத்திற் கொண்டதேயாகும்; இல்லையேல், மோனைக்குச்சேர (அன்பரடிப்பொடி)என்று இயற்றியிருப்பர்' என்று, இவர் மோனையின்பத்தை எவ்வளவுகண்டிருக்கின்ருரென்றறியோம். எதுகைக்கும் மோனைக்கும் சேர ஒருவர் திருக்குறளைத் திருத்தின கதையை நினைப்பது.

ஆழ்வார்களின் கால ஆராய்ச்சிக்காரர்களுக்கு நாம் முக்கியமாகத் தெரிவிப்பதொன்றே. திருவரங்கம் பெரியகோயிலில் சந்திரபுஷ்கரிணியின் கிழக்கே வாஸ ப் பெருமாள் ஸன்னிதியில் ஆழ்வார்கள் பதின்மரும் வீற்றிருந்த திருக்கோலமாகத் திருப்ரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறார்கள், பட்டர் ஸ்ரீரங்கராஜ ஸ்தவ பூர்வசதகத்தில் சந்திரபுஷ்கரிணிக்கு ச்லோகமிரண்டு இட்டருளினபிறகு "பூர்வேண தாம் தத்வத்"என்று தொடங்கி "பராங்குசாத்யா: ப்ரதமே புமாம்ஸோ நிஷேதிவாம்ஸோ தசமாம் தயேரந்" என்று பணித்துள்ளார் ''வீற்றிருந்த திருக்கோலமாக எழுந்தருளியுள்ள நம்மாழ்வார் முதலான ஆழ்வார்கள் பதின்மரும் என்பால் அருள் செய்யவேணும்'' என்பது இதன் கருத்து. பட்டரென்பவர் கூரத்தாழ்வானுடைய திருக்குமாரர். இவர்களின் காலமும் ஸ்ரீ ராமாநுஜரின் காலமும் ஒன்றே. ஸ்ரீராமாநுஜருடைய காலத்திற்கு முன்னமே ஆழ்வார்கள் பதின்மர்க்கும் மூலவிக்ரஹப்ரதிஷ்டை நிகழ்ந்திருக்கின்றதென்பது இதனால் நன்கு விளங்கிற்று. ஸ்ரீராமாநுஜர் காலம் இற்றைக்கு நாற்பது வருஷம் குறைய ஆயிரம் வருஷமாகிறது. ஆக, ஆயிரமாண்டுகட்கு முன்னமே ஆழ்வார்கள் பதின்மர்க்கும் (மூலவிக்ரஹ) ப்ரதிஷ்டை ஆகியுள்ளதென்று தேறிற்று. நவீன ஆராய்ச்சியாளர்கள் இதைக் கண்டிலர். உலகில் ஒருவர்க்கு விக்ரஹப்ரதிஷ்டை ஏற்படவேணுமானால் அவர் மறைந்தவுடனே ஏற்பட்டுவிடாது. மறைந்தபிறகு அவருடைய புகழ் மிகமிகப் பரவிப் பலபலவாண்டுகள் கடந்தபின்னரே விக்ரஹப்ரதிஷ்டை ஏற்படும். அதிலும் ஸ்ரீரங்கநாதனுடைய ஸன்னிதியில் ப்ரதிஷ்டை ஏற்பட்டதென்றால் இது ஸாமாந்யமாக—லகுவாக ஏற்படக்கூடியதன்று, இந்த ஒன்றுகொண்டே ஆழ்வார்களின் காலநிலையைப்பிராமாணிகர்கள் அறுதியிடலாம்.

ஆழ்வார்களின் பெருமையை நாம் நடுநிலையில் நின்று அறிந்துகொள்ள ஸ்ரீபாகவதமென்கிற க்ரந்தமொன்றே போதும். அது ஸ்ரீவைஷ்ணவர்கள் மட்டும் ஆதரிப்பதன்று. உலகிலுள்ள வைதிக மதத்தவர்கள் யாவரும் ஸ்ரீராமாயணம் போல் ஆதரித்து வருமது. அதில் பதினொராவதுஸ்கந்தத்தில்(5) "க்ருதாதிஷு நரா ராஜந்! கலௌ இச்சந்தி ஸம்பவம், கலௌ கலு பவிஷ்யந்தி நாராயணபராயணா:" என்று தொடங்கியுள்ள சுலோகங்களை நமது பூருவாசாரியர்கள் ரஹஸ்ய நூல்களில் எடுத்துக்காட்டியுள்ளார்கள். ஆசார்யஹ்ருதயத்தில் ''க்வசித் க்வசித் தென்று இவராவிர்ப்பாவம் "கலியுங் கெடும்போலே ஸூசிதம்" என்றருளிச் செய்யப்பட்டுள்ளது. வேதாந்த தேசிகன் தமது குருபரம்பராஸாரமென்னும் ரஹஸ்யத்தில் சிறிது விரிவாகப் பணித்துள்ளார். எங்ஙனேயென்னில், ''பூதகவாடைப்பிரானார் பிரமகுருவாகி வந்தென்றும் சொல்லுகிறபடியே அகஸ்த்யஸேவிதமான தேசத்திலே அநேக தேசிகாபதேசத்தாலே அவதரித்தருளினான். இத்தைக் கணிசித்து "கலௌ கலு பவிஷ்யந்தி நாராயண பராயணா:. க்வசித் க்வசிந் மஹாபாகா: த்ரமிடேஷு ச பூரிச:; தாம்ரபர்ணீ நதீ யத்ர க்ருதமாலா பயஸ்விநீ. காவேரீ ச மஹாபாகா ப்ரதீசீ ச மஹாநதீ' என்று மஹர்ஷியருளிச்செய்தான்'' என்பது குருபரம்பராஸார (தேசிக) ஸூக்தி. மேலெடுத்துக்காட்டிய ச்லோகங்களில்—தாம்ரபர்ணி, க்ருதமாலா, பயஸ்விநி, காவேரி, ப்ரதீசீ—என்று ஐந்து நதிகள் காட்டப்பட்டுள்ளன.

நதிகள் நான்கில்லை. ஆறில்லை. இந்த ஐந்து நதிகளின் கரையிலேதான் ஆழ்வார்கள் திருவவதாரம் செய்தருளியுள்ளார்கள். தாம்ரபர்ணீதீரத்தில் நம்மாழ்வாரும் மதுரகவியாழ்வாரும். க்ருதமாலா என்பது தென்மதுரையில் பெருகுவது. இதன் கரையில் பெரியாழ்வாரும் ஆண்டாளும், பயஸ்விநியென்பது பாலாறு. இவ்வாற்றின் கரையில்-பொய்கையார் பூதத்தார் பேயார் திருமழிசைப்பிரான் ஆகிய நால்வர். காவேரியின் தீரத்தில்-தொண்டரடிப்பொடியாழ்வார், திருப்பாணாழ்வார், திருமங்கையாழ்வார் இம்மூவர் தோன்றினர், ப்ரதீசீ என்பது மேலாறு; அது மலை நாட்டிலே பெருகுவது. [அதில் அடியேன் நீராடியிருக்கிறேன்.] அதன் கரையில் குலசேகராழ்வார் திருவவதரித்தருளினர். நதியும் மிச்சப்படவில்லை. ஆழ்வார் களும் மிச்சப்படவில்லை. ஒரு விசேஷம் குறிக்கொள்ளவேணும். கங்கை, யமுனை, ஸரஸ்வதி, ஸரயு, க்ருஷ்ணை, துங்கபத்ரை முதலிய புண்ய நதிகளுமிருக்கின்றன அந்தநதிகளின் கரையிலும் சிலசில பக்தர்கள் தோன்றியிருக்கலாம். ஆனால் அந்த நதிகளை ப்ரஸ்தாவிக்கவில்லை. 'கலௌ—க்வசித்க்வசித் பவிஷ்யந்தி' என்று சொன்னதோடு நில்லாமல், தமிழ்நாட்டில் அதிகமாக அவதரிக்கப்போகிறார்கள். [த்ரமிடேஷு ச பூரிஶ:*] என்று சொல்லியிருப்பது ஒன்று; ஆழ்வார்களில் நம்மாழ்வார்க்கு ப்ரபந்த ஜநகூடஸ்தரென்கிற ப்ராதாந்யம் தோன்றப்போகிறதென்பதறிந்து தாம்ரபர்ணீ நதியை முந்துறமுன்னம் கூறியிருப்பது மற்றொன்று,

ஆக இவ்வளவோடு நாம் இவ்விஷயத்தை இப்போது நிறுத்திக்கொள்ளலாம். கி. பி. ஏழாவது நூற்றாண்டுக்கு நெடுநாளைக்கு முன்னரே ஆழ்வார்கள் பதின்மர்க்கும் விக்ரஹப்ரதிஷ்டை நடந்திருக்கின்றதென்பதை ப்ரபலப்ரமாணபூர்வகமாகக் காட்டியானபின்பு பிறருடைய இருளும் மருளும் மலிந்த பேச்சுக்களை நாம் பொருள்படுத்தியெழுதுவது பயனற்றபணியன்றோ. ஆயினும் இன்னும் சில நிருபணங்கள் செய்து நிற்போம்.

— மயிலை மாதவதாஸருடைய மேன்மை —

நாலாயிர திவ்வியப்பிரந்தமச்சிட்டவர்களில் மயிலை மாதவதாஸரென்பவரும் பரிகணிதராவர். இவர் தமது இரண்டு பதிப்புகளில் பிராமாணிகர்களுக்கு அபிமதமான ஆழ்வார்களின் காலக்குறிப்பை விரிவாகக் கண்ணாடிபோல் காட்டிவிட்டு, டாக்டர். N. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், பி.டி. ஸ்ரீநிவாஸய்யங்கார் பி.ஏ., கோபிநாதராவ், மு, ராகவையங்கார் முதலிய நவீன ஆராய்ச்சியாளர்கள் ஆழ்வார்களின் காலம் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து பத்தாம் நூற்றாண்டுக்குட்பட்ட ஐந்நூறு வருடங்கள் என்கின்றனர். ஸம்ப்ரதாய ஞானமும் சரித்ரஞானமும் ஒருங்கே வாய்க்கப்பெற்ற ஸ்ரீவைஷ்ணவப் பேரறிஞர்களுடைய ஆராய்ச்சி முறையில் முக்கிய விஷயமாக இஃதுள்ளது'' என்று ஸாத்விக முறையில் எழுதியுள்ளார்.

இராமநாதபுரத்தில், ரா—ராகவையங்காரென்றும், மு. ராகவையங்காரென்றும் ராகவையங்கார்களிருவர் வாழ்ந்தனர். இவர்களில் ரா—ராகவையங்காரென்பவர் ஸதாசார்ய ஸன்னிதியில் பகவத்விஷய-ரஹஸ்யாதி க்ரந்த காலக்ஷேபஞ் செய்து ஆழ்வாராசாரியர்களின் திருவடிகளில் ப்ராவண்யமே வடிவெடுத்திருந்தவர். மு. ராகவையங்காரென்பவர் இதற்கு மாறாக இருந்தவர். அவர் திவ்யப்ர

பந்தப் பாசுரப் பாடங்களைப் பூர்வாசார்ய வியாக்கியான விருத்தமாகத் திருத்தி "அருளிச்செயற்பாடவமைதி" என்றொரு கட்டுரையையெழுதி மதுரைச் செந்தமிழ்ப் பத்திரிகையில் வெளியிடுவித்தார். அது, வெளிவந்த மறுநாளே செந்தமிழாராய்ச்சி என்னும் நமது விரிவான நூலினால் முற்றமுடிய மறுக்கப்பட்டொழிந்தது. ஆழ்வார்களின் காலநிலையைப்பற்றி அவர் எழுதியிருந்ததும் நம்மால் மறுக்கப்பட்டு மடிந்தது. நம்முடைய மறுப்பு நூல்கள் யாவும் அந்த மு. ராகவையங்காருடைய ஜீவிதகாலத்திலேயே வெளிவந்தன. வெளிவந்தபின் 10, 12 வருடங்கள் அவர் ஜீவித்திருந்து நம்மோடு நட்புங் கொண்டனர்.

நம்முடைய மறுப்பு நூல்களில் ஒன்றுக்கும் மறுப்புரைக்கவோ எழுதவோ அப்பெரியார் நெஞ்சாலும் நினைத்ததில்லை. அவ்வளவேயன்று; திருவனந்தபுரத்திலும் இராமநாதபுரத்திலும் காஞ்சீபுரத்திலும் நம்மை அவர் சந்திக்க நேர்ந்த காலங்களில் நமது ஸமாதானங்களினால் தாம் பரம த்ருப்தியடைந்ததாகவும் கூறினர். [இவ்விஷயம் இப்போதாக எழுதப்படுவதன்று; பல சந்தர்ப்பங்களில் பலகால் எழுதப்பட்டுள்ளதைச் சென்னையில் வாழும் தொண்ணூறு பிராயத்தவரான ஸ்ரீமதுபயவே. ராவ்ஸாஹிப். S. ராகவையங்கார் ஸ்வாமி நன்கறிவர்.]

— கல்வெட்டுகளைப்பற்றி —

இவர்கள் காட்டும் கல்வெட்டெல்லாம் இவர்களது இருள் துயக்கு மயக்கு மருள்களுக்கிட்ட கல்வெட்டே யென்று பிராமாணிகர்கள் திடமான நம்பிக்கை கொள்ளலாம்.

> 'முதல் ஆதித்தசோழன் காலத்துக் கல்வெட்டென்று கருதப்படும் திருக்கண்ணபுரம் கல்வெட்டொன்றில் ஒருவன் பெயர் சடகோபனென்று காணப்படுகின்றது. அக்கல்வெட்டின் காலம் கி. பி 908என்னலாம். நம்மாழ்வாருக்கு முன்னர் இப்பெயரைக் கொண்டவர் வேறு எவரும் இல்லை......"

என்றெழுதியுள்ளார் இராசமாணிக்கனார் (பக்கம் 46ல்). சடகோபரென்னுந் திருநாமம் நம்மாழ்வாருக்கு அஸாதாரணமென்கிற வுணர்ச்சி இவர்க்கும் இவரைச் சார்ந்தவர்கட்கும் யதார்த்தமாக இருக்குமாகில் இக்காலவாராய்ச்சியில் இவர்கள் கைவைக்க ப்ரஸக்தியேயிராது. விஷ்ணுவாலயங்களில் பாஞ்சராத்ரம் வைகாநஸம் என்று இருவகுப்பாகவுள்ள கோவில்களெல்லாவற்றிலும் எம்பெருமானுடைய திருவடிநிலைக்கு ஸ்ரீ சடகோப னென்றே வியபதேசம் எங்குமுள்ளது. இஃது என்றைக்குத் தொடக்கமாயிற்றென்று இவ்வாராய்ச்சியைச் செய்து முடிவுகண்டபின்பன்றோ ஆழ்வார்காலத்தினாராய்ச்சியில் இவர்கள் இறங்கவேணும், "நம்மாழ்வார் அவதரித்து சடகோபனென்று திருநாமம் வஹிப்பதற்கு முன்னமே சடகோபநாம ப்ரஸித்தியிருந்தது" என்று எழுத இவர்களுக்குக் கைவரவில்லை. "நம்மாழ்வார்க்கு முன்னர் இப்பெயரைக் கொண்டவர் வேறு யாருமில்லை" என்று ஐயந்திரிபற இவர்கள் கையினால் எழுதுவித்தது தெய்வமன்றோ.

அர்ச்சாவதாரம் எப்போது ஏற்பட்டது? அர்ச்சாவதார பகவான்களின் திருவடி நிலைக்கு ஸ்ரீ சடகோபன் (அல்லது) ஸ்ரீ சடாரி யென்கிற வியபதேசம் என்றைக்கு ஏற்பட்டது? என்று விமர்சித்து நிர்ணயிக்கவேண்டுவது மிகமுக்கியம்.

ஸ்ரீமத் வேதாந்ததேசிகன் பணித்த பாதுகாஸஹஸ்ரத்தில் "த்ரமிடோபநிஷந்நிவேஶ ஶூந்யாநபி லக்ஷ்மீரமணாய ரோசயிஷ்யந், த்ருவமாவிஶதிஸ்ம பாதுகாத்மா" என்கிற சுலோகத்தை யநுபவிக்கப் பிறந்தவர்களல்லரே இவர்கள்.

இந்த விசாரங்களினிடையே ஒரு முக்கியமான விசாரம் அவசியமானது. ஸ்ரீ ராமாயணத்தில் சித்திரகூடத்தில் பரதாழ்வானோடுகூட வந்தவர்களில் ஒருவரான ஜாபாலி முனிவர் நாஸ்திகவாதத்தைச் செய்ய, அதற்குக் கண்டன முரைக்கின்ற சக்ரவர்த்தி திருமகனார் "யதாஹி சோரஸ் ஸ ததாஹி: புத்த:" என்று புத்தனையெடுத்துக் காட்டியிருப்பதை அறியாதாரில்லை. புத்தனுடைய காலத்தை எவ்விதமாக நிர்ணயித்திருக்கிறீர்கள். இற்றைக்கு இரண்டாயிரத்துச் சொச்சம் வருடங்களுக்கு முன்பென்று தானே நிர்ணயித்திருக்கிறீர்கள். அந்த புத்தனை யுதாஹரித்த ஸ்ரீராமபிரானுடைய காலம் கி. பி. வருடங்களுக்குச் சற்றுமுன்னரோ மிகவும் பின்னரோ இருக்கவேண்டும். ஸ்ரீராமாயணம் அவதரித்த காலம் கி. பி. எத்தனையாவது நூற்றாண்டாக இருக்கலாமென்பதையும் இவ்வாராய்ச்சியாளர்கள் ஆராய்ந்து முடிவு செய்க. வடமொழி வேதத்தில் நூற்றுக்கணக்கான கதைகள் நடந்தனவாக ஓதப்பட்டுள்ளது; அவற்றைப் பலகால் விவரித்திருக்கிறோம்.

யதார்த்தவாதியான வேதம் அக்கதைகள் நடவாமலிருந்தால் கூறமாட்டாது. ஒவ்வொருகதையாக எடுத்துக்கொண்டு 'இக்கதை எப்போது நடந்தது? இக்கதை எப்போது நடந்தது?' என்று ஆராய்ந்து அவ்வவற்றுக்குக் காலம் கண்டுபிடிக்க முயலவேணும். எம்மால் கண்டுபிடிக்க முடியவில்லை என்பவர்கள் தமிழ் வேதத்தில் கூறப்படும் அரசர்களது கதைகளின் காலமும் கண்டுபிடிக்க முடியாததென்று கையொழிந்து நிற்கவேணும், இதைக் கண்டுபிடிக்க ஸாதனமிருக்கிறதேயென்னில், வஞ்சகமான ஸாதனங்களைக்கண்டு மருளவேண்டாவென்று பல்காலுங் கூறியுள்ளோம்.

இருள் துயக்கு மயக்கு மறப்பென்கிறவற்றுக்கெல்லாம் கொள்கலமாகிய நம் போலியர் தகர்க்குமளவிலே நிற்பதன்று உண்மைப் பொருள். ஆயினும் இவர்கள் சித்தாந்தம் செய்கிறபடியே ஆழ்வார்கள் மிகவும் பிற்காலத்தவர்களென்றே வைத்துக் கொள்வோம். கி. பி. ஆறாவது நூற்றாண்டிலிருந்தவர் நம்மாழ்வார் என்கிறார்கள். பதினாறாவது நூற்றாண்டிலென்றும் வைத்துக்கொள்வோம். நிகழும் நூற்றாண்டில் என்றும் வைத்துக்கொள்வோம். அருமருந்தன்ன திவ்வியப் பிரபந்தங்கள் 'தொண்டர்க்கு அமுதுண்ணச் சொன்மாலைகள் சொன்னேன்" என்றபடி அநுபவ ரஸிகர்களுக்குத் தேனும் பாலும் நெய்யும் கன்னலுமமுதுமாக அமைந்திருக்கின்றமை அபலபிக்க முடியாத விஷயம். பதினாயிர மாண்டுகட்கு முற்பட்டவை யென்று வேறு சில நூற்கள் கிடைத்தாலும் அவற்றை ஒரு பொருளாக மதிப்பாரில்லை. திருவாய்மொழியின் ஈற்றுப் பாசுரத்தின் வியாக்கியானத்திலே (ஈடுமுப்பத்தாறாயிரப்படியில்) நம்பிள்ளை அருளியுள்ள ஒருஅற்புதமான ஸ்ரீஸூக்தி காணுமின்:

"ஆழ்வார்க்குப் பின்பு நூறாயிரம் கவிகள் போருமுண்டாய்த்து. அவர்கள் கவிகளோடு கடலோசையோடுவாசியற்று அவற்றைவிட்டு இவற்றைப்பற்றித் துவளுகைக்கடி இவருடைய பக்தியபிநிவேசம் வழிந்து புறப்பட்ட சொல்லாகையிறே."
என்கிற இந்தஸ்ரீஸூக்திகள் விலையுயர்ந்தவை. இவ்வளவோடு நிற்போமிப்போது.

P. B. A.